**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# Sangya Philosophy in Manimegalai

**Senbagam S[1*], Dr. Ilayaraja M[2],**
[1]Full-Time Research Scholar, Department of Tamil Studies, Government Arts College, Ariyalur - 621 713 (Affiliated to Bharathidasan University).
[2]Research Supervisor & Associate Professor, Department of Tamil Studies, Government Arts College, Ariyalur - 621 713 (Affiliated to Bharathidasan University).
*Correspondence: senbatamil250@gmail.com, Tel: 7868939484

**Article Info**
Received on 20-April-2026, Revised on 27-April-2026, Accepted on 28-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

The study examines how the Manimekalai Kappiyam records the Sangkiya philosophy prevalent in Tamil Nadu in the second century AD. Furthermore, it investigates how the text positions Samkhya (Sangkiya) in relation to the ascendant Buddhist philosophy championed by the epic's protagonist. By contrasting Kapila's dualistic framework of Prakriti (matter) and Purusha (consciousness) against the Buddhist doctrines of dependent origination and impermanence, the study illuminates the vibrant intellectual debates of the Sangam and post-Sangam eras. Ultimately, this research underscores the Manimekalai not merely as a religious narrative, but as an invaluable historical compendium that preserves the nuances of early Indian philosophical systems as they were understood and debated in the ancient Tamil landscape.

***KEYWORDS:*** *Sankhya, Kapila, the original (Prakriti), Purudan, the three gunas, twenty-fivtheories, Satkariya theory.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Kalanjiyam International Journal of Tamil Studies* *E-ISSN 2456-5148*
Volume 6 | Issue 01, May 2026 Online: www.ngmtamil.in

# மணிமேகலையில் சாங்கிய மெய்யியல்

[1]***செ.செண்பகம்,** முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
அரசு கலைக்கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது) அரியலூர் - 621 713.
மின்னஞ்சல்: senbatamil250@gmail.com, அலைப்பேசி : 7868939484

[2]**முனைவர் ம.இளையராஜா,** நெறியாளர், இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகம், இணைவு பெற்றது), அரியலூர் - 621 713.

**ஆய்வுச் சுருக்கம்**

கி.பி. இரண்டாம் நூற்றாண்டுத் தமிழகத்தில் திகழ்ந்த சாங்கியத் தத்துவத்தை மணிமேகலை காப்பியம் எவ்வாறு பதிவு செய்துள்ளது என்பதை ஆராய்கிறது. கபிலரால் தோற்றுவிக்கப்பட்ட சாங்கியத்தின் 'சற்காரிய வாதம்', 'முக்குணக் கொள்கை' மற்றும் 'இருபத்தைந்து தத்துவங்கள்' குறித்து மணிமேகலை காட்டும் மெய்யியல் கூறுகளை ஆய்வு விரிவாக அலசுகின்றது.

**திறவுச் சொற்கள்**

சாங்கியம், கபிலர், மூலப்பகுதி (பிரகிருதி), புருடன், முக்குணங்கள், இருபத்தைந்து தத்துவங்கள், சற்காரிய வாதம்.

**முன்னுரை**

தமிழின் முதல் தர்க்கக் காப்பியமான மணிமேகலை, சமயக் கருத்துக்களை விவாதிப்பதற்கென்றே 'சமயக்கணக்கர் தந்திரம் கேட்ட காதை' என்னும் பகுதியை ஒதுக்கியுள்ளது. தமிழ் மண்ணில் மணிமேகலை சந்தித்த சமயவாதிகளுள் சாங்கியத் தலைவன் மிக முக்கியமானவன். பிரபஞ்சத் தோற்றத்திற்குப் படைப்புக் கடவுள் ஒருவன் தேவையில்லை என்றும், இயற்கையின் மாற்றமே உலகம் என்றும் வாதிடும் சாங்கியத்தின் ஆழமான தர்க்கங்களைப் இக்கட்டுரை விரிவாக ஆராய்கின்றது.

**1) சாங்கியம் - சொல்லாக்கமும், சொற்பொருளும்**

சாங்கியத் தத்துவத்தின் முதன்மையான மையக்கருத்து, முக்குணங்களும் பரிபூரணச் சமநிலையில் இருக்கும் ஆதி இயற்கையைப் பற்றிய அதன் கணிப்புதான். புராதன இந்தியாவில் சாங்கியம் அறிஞர்கள் மத்தியில் மிகுந்த புகழ் பெற்றிருந்தது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

**அ) சொல்லாக்கப் பின்னணி**

“சாங்கியம்” என்னும் சொல்லாடல் “சாங்கிய” என்னும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து உருவானது. இச்சொல்லானது பயன்பாட்டு அடிப்படையில் பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது:

**1. எண்ணிக்கை:** இத்தத்துவம் பிரபஞ்சத்தின் உண்மைகளை இருபத்தைந்து (25) எனத் துல்லியமாக எண்ணிக்கையிட்டு வகைப்படுத்தியதால் “சாங்கியம்” எனப் பெயர் பெற்றது.

**2. தீர்க்க ஞானம்:** வெறும் நம்பிக்கையாக இல்லாமல், தர்க்க ரீதியான மெய்யான நோக்கத்தைக் கொண்டிருந்தமையால் இப்பெயர் பெற்றது.

**3. பகுத்தறிதல்:** அழியக்கூடிய “இயற்கை” (பிரகிருதி) எது, நிலையான “ஆன்மா” (புருடன்) எது என இரண்டையும் பிரித்து அறிவதே சாங்கியத்தின் அடிப்படைப் பொருளாகும்.

**ஆ) வட்டார வழக்கும் பயன்பாடும்**

தமிழகச் சூழலில் இச்சொல் மெய்யியல் தளத்தைத் தாண்டி வட்டார வழக்குகளிலும் பயின்று வருகிறது. தமிழ் வட்டார வழக்கில் “சாங்கியம்” என்ற சொல் சடங்குகள் அல்லது சடங்கு முறைகள் என்ற பொருளில் இன்றும் பயன்படுத்தப்படுகிறது. இது தத்துவார்த்தப் பொருளிலிருந்து சடங்கு சார்ந்த பொருளாக மருவியுள்ளது.[1]

**ஜெயமோகன், இந்து ஞான மரபில் ஆறு தரிசனங்கள் (ப-109)**

**2) சாங்கியத்தின் ஆதிகுரு - கபிலர்**

சாங்கியத் தரிசனத்தை முறைப்படுத்தியவர் கபில முனிவர் ஆவார். இவரைப் பற்றிய வரலாற்றுப் பின்புலம் பின்வருமாறு அமைகிறது.இந்திய மெய்யியல் மரபில் கபிலர் சாங்கியத்தின் ஆதி குருவாகவும், “ஆதி வித்வான்” என்றும் போற்றப்படுகிறார்.சங்க இலக்கிய மரபில் கபிலர் என்ற பெயர் பரவலாகப் புழக்கத்தில் இருந்துள்ளது.

“தொல்கபிலர்”, “கபிலர்” என இரு வேறு புலவர்கள் குறிக்கப்படுவதன் மூலம் கபிலர் என்பது ஒரு தனிநபரைக் குறிக்கும் பெயராக மட்டுமன்றி, ஒரு குறிப்பிட்ட தத்துவப் பள்ளியின் அடையாளப் பெயராகவும் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. கபிலருக்கு நேர்முக மாணவர்கள் பல இருந்ததாலும், அவரின் அளவற்ற வரலாற்றுச் சரித்திரம் இன்று கிடைக்கவில்லை எனினும், சாங்கியத்தின் மூலவராக அவரே ஏற்கப்படுகிறார்.[2]

**ஜெயமோகன், இந்து ஞான மரபில் ஆறு தரிசனங்கள் (ப-110)**

**சாங்கியத்தின் தொன்மை**

இந்திய மெய்யியல் வரலாற்றில் சாங்கியத் தத்துவம் வடநாட்டில் தோன்றியது என்ற பொதுவான கருத்து நிலவினாலும், தமிழகத்தின் சங்க காலத்திலேயே இத்தத்துவம் ஆழமாக வேரூன்றி இருந்தது என்பதைச் சங்க இலக்கியச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக, கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய மணிமேகலைக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே தொகுக்கப்பட்ட பரிபாடல், சாங்கியத்தின் அடிப்படைக் கொள்கையான 'இருபத்தைந்து தத்துவங்களை' மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளது. பரிபாடலில் திருமாலைப் போற்றும் புலவர் இளம்பெருவழுதியார், இறைவனைப் பிரபஞ்சத்தின் மூலப்பொருளாகவும், அந்தப் பிரபஞ்ச விரிவையும் தத்துவங்களின் தொகுப்பாகவும் உருவகிக்கின்றார். இதனை பரிவாடலில்

**“நின்கண் மூலப் பகுதி மூன்று குணம் எய்தி**

**இருபத்தைந்து தத்துவத்து இயற்கை”[3]**

**(பரிபாடல், பாடல்: 3, வரிகள் 28-29)**

இப்பாடலடியில் “மூலப்பகுதி' என்பது முக்குணங்களின் (சத்துவம், இராசதம், தாமதம்) சேர்க்கையாக உருப்பெற்று, அதிலிருந்து பிரபஞ்சத்தின் இருபத்தைந்து தத்துவங்கள் தோன்றி விரிவடையும் இயற்கையாகத் திகழ்கிறது என்பதைப் புலவர் விளக்குகிறார்.

**“கணிதவன் கண்ணுற்ற சாங்கியம்”[4]**

**(புறநானூறு, வஞ்சினக்காஞ்சி பா.36)**

மணிமேகலை காப்பியத்தில் வரும் சாங்கியவாதி இந்த 25 தத்துவங்களைத்தான் "மூலப்பகுதி முதலாகப் புருடன் ஈறாக" வரிசைப்படுத்துகிறான். எனவே சாங்கியம் என்பது தமிழகத்தில் ஏதோ ஒரு காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட தத்துவம் அல்ல, அது சங்க காலத்திலேயே தமிழர்களின் வாழ்வியலோடும் வழிபாட்டோடும் (திருமால் வழிபாடு) இணைந்துவிட்ட ஒரு தொன்மையான மெய்யியல் சிந்தனை என்பது புலனாகிறது.

**“ஒப்பநின்ற முக்குணத்து அமைந்த**

**செப்பமில் மூலப்பகுதி யுள்ளால்”[5]**

**(மணிமேகலை 27: 209-210)**

உலகம் தோன்றுவதற்கு முன்னால் இருந்த “மூலப்பகுதி” (பிரகிருதி) என்பது மூன்று குணங்களின் சமநிலையாகும் என்பதை இப்பாடல் விளக்குகிறது. சமயக் கொள்கைகளை விளக்கும் நீலகேசியில், சாங்கியவாதிக்கும் நீலகேசிக்கும் இடையே நடக்கும் விவாதம் ஒரு தர்க்கக் களமாகவே அமைந்துள்ளது.

**“இயற்கை அறிவு இலது**

**புருடன் தான் ஒரு**

**செயலும் இலன்”[6]**

**(நீலகேசி, பாடல்: 344)**

இயற்கைக்கு அறிவில்லை என்றும், அதன் நுகர்வோனாகிய புருடன் செயலற்ற தன்மை உடையவன் என்றும் சாங்கியத்தின் இருமை வாதத்தை இப்பாடல் பதிவு செய்கின்றது. மேலும்,

**“ஐவைந்து ஏறிய அறிவனராகி”[7]**

**(சிலம்பு : நீர்ப்படைக்காதை - 182)**

என்றும்,

**“ஐந்துடன் ஐந்துடன்**

**...........................**

**............................**

**ஆறாய் அமர்ந்தவன்”[8]**

**திருமந்திரம் (பாடல்-2132)**

திருமூலர் தனது திருமந்திரத்தில் (பாடல் - 2132) 25 தத்துவங்களைக் கடந்து 26-வது தத்துவமாக இறைவனை அறிவதே முக்தி என்று குறிப்பிடுகின்றார்.

**சாங்கிய அளவையியல்**

ஒரு மெய்யியல் பள்ளி தான் முன்வைக்கும் உண்மையை 'மெய்' என நிறுவுவதற்குப் பயன்படுத்தும் கருவிகளே அளவைகள் எனப்படும். மணிமேகலை காப்பியத்தில் சாங்கியவாதி அறிவுப் புலப்பாட்டிற்கான அடிப்படை ஆதாரங்களாக மூன்று அளவைகளை முன்மொழிகின்றான்.

**அளவைகளின் வகைப்பாடு**

சாங்கியம் பத்து வகை அளவைகளை ஏற்காமல், அனைத்தையும் உள்ளடக்கிய மூன்று முதன்மை அளவைகளை மட்டும் அங்கீகரிக்கிறது. பிற சமயங்கள் கூறும் உவமானம், அருத்தாபத்தி போன்றவற்றை இந்த மூன்றிற்குள்ளேயே அடக்கிவிடுவது இவர்களின் தர்க்க முறையாகும்.

**“காட்சி கருதல் உரைஎன மூன்றே**
**மாட்சியின் வருவா அளவையாம்”[9]**

**(மணிமேகலை 27: 205-206)**

சாங்கியவாதி தனது அளவைகளை நிலைநாட்டும்போது, நீலகேசி அதற்கெதிராகத் தர்க்க ரீதியாக எதிர்வாதம் புரிகின்றார்.

**“காட்சி ஆதி மூன்றினால் அளப்பாய்”[10]**

**(நீலகேசி, பாடல்: 345)**

ஒரு மெய்யியல் பள்ளி தான் முன்வைக்கும் உண்மைகளை “மெய்” என நிறுவுவதற்குப் பயன்படுத்தும் கருவிகளே அளவைகள் எனப்படும். சிவஞான சித்தியார், சாங்கியத்தின் மூன்று அளவைகளை அடிப்படையாகக் கொண்டு விரிவுபடுத்தி விளக்குகிறார். இதனை மணிமேகலையில் சாங்கியவாதி பின்வருமாறு வகைப்படுத்துகிறார்:

**“காட்சிஇ கருதல் உரை அபாவம் அருத்தாபத்தி”[11]**

**(சிவஞான சித்தியார், அளவை இயல்: 1)**

**1) காட்சி அளவை**

ஐம்பொறிகளால் (மெய், வாய், கண், மூக்கு, செவி) ஒரு பொருளை நேரடியாக உணர்வது "காட்சி" எனப்படும். இது ஐயத்திற்கும் திரிபிற்கும் இடமில்லாத நேரடி அறிவாகும். இதனை மணிமேகலையில் சாங்கியவாதி:

**"சுட்டுணர்வு மாத்திரையது ஆகித் தோன்றி**
**வெம்பம தன்மையொடு எனவரும் விகற்பமும்**
**நாமசாதி குணக்கிரியைகளும் தாமே**
**தோன்றும் காட்சியுமாகும்"[12]**

**(மணிமேகலை 27: 205-206)**

புலன்களால் ஒரு பொருளை அறியும்போது அதன் வடிவம், தன்மை போன்றவை நம் உணர்வுகளில் பதிகின்றன. பிற்காலத் தர்க்க அறிஞர்களான பௌத்த தர்க்கவியல் அறிஞர் திண்ணாகர் மற்றும் தருமகீர்த்தி போன்றோர் காட்சியினை "வாயிற்காட்சி" மற்றும் "மானதக் காட்சி" என வகைப்படுத்தினர். ஆனால் மணிமேகலையில் வரும் சாங்கியவாதி ஐம்புலன்களின் வாயிலாகப் பெறப்படும் நேரடி அனுபவத்திற்கே முதன்மை அளிக்கின்றார்.[13]

**க நெடுஞ்செழியன், தமிழர் தத்துவம் (ப-215)**

**ii) கருதல் அளவை**

நேரடியாகக் காண முடியாத ஒரு பொருளை, அதனோடு தொடர்புடைய ஒரு குறியீட்டைக் கொண்டு ஊகித்து அறிவது 'கருதல்' ஆகும். மணிமேகலையில் இது மூன்று நிலைகளில் விளக்கப்படுகிறது:

**"கருதல் என்பது மூன்று காலமும்**
**பொருடு குறியின் தெரிந்துணர்தல் ஆகும்"**

**ஆயுதல் (பூர்வவத்து):**

வானத்தில் கார்மேகங்களைக் கண்டு "இனி மழை பெய்யும்" என வருங்காலத்தை ஊகித்தல். இங்கு 'கார்மேகம்' என்பது குறியீடு.

**பின்பு (சேஷவத்து):**

ஆற்றில் வரும் கலங்கிய புதிய வெள்ளத்தைக் கண்டு "மலையில் மழை பெய்துள்ளது" என இறந்தகாலத்தை ஊகித்தல்.

**பொதுமை (சாமானியதோ திட்டா):**

ஒரு பொருளின் பொதுவான இயல்பைக் கொண்டு நிகழ் காலத்தை அறிதல்.

எ.கா: ஓரிடத்தில் புகையைக் கண்டால் "அங்கே நெருப்பு உண்டு" என ஊகித்தல்.

**"பொதுமை என்பது புகையினால் நெருப்பும்**

**முதலினது இயல்பாய் முடிவும் அறிதல்"[14]**

**(மணமேகலை 27: 219-224)**

இது நிகழ்ச்சியின் உண்மையை உணர்த்துவதோடு ஒரு பொருளின் தொடக்கத்தையோ (காரணம்) அல்லது அதன் இயல்பையோ கண்டால் அதன் முடிவை (காரியம்) அறிய முடியும். மேலும், பிற்காலத் தர்க்க நூல்கள் இப்பகுதிய அன்வய-வெதிரேகி அடிப்படையில் விளக்குகின்றன.

**உடன்பாடு:** எங்கு புகையுண்டோ அங்கு நெருப்பு உண்டு. (எ.கா: அடுப்பு)

**எதிர்மறை:** எங்கு நெருப்பு இல்லையோ அங்கு புகை இல்லை. (எ.கா: குளம்)

மணிமேகலை காட்டும் சாங்கியம் இத்தர்க்க முறையைப் பயன்படுத்தி, "இந்த உலகம் (காரியம்) தோன்றுவதற்கு ஒரு மூலப்பொருள் (காரணம்) இருக்க வேண்டும்" என்ற முடிவிற்கு வருகின்றது.

**iii) உரை**

தகுதியுடைய சான்றோர்கள் அல்லது மெய்நூல்கள் வாயிலாகப் பெறப்படும் அறிவு "உரை" எனப்படும். இதனை மணிமேகலையில் சாங்கியவாதி பின்வருமாறு வரையறுக்கிறான்:

**"உரை என்பது குற்றமற்றோர் வாய்மொழி**

**தரையில் தத்துவத்தின் நிலைநிறுத்திக் காட்டும்"[15]**

**(மணிமேகலை 27: 215)**

மணிமேகலையில் "நூல்" என்பது "நுணங்கியோர் வாய்மொழி" என்றும் குறிக்கப்படுகின்றது. சிவஞான சித்தியார் சைவ சித்தாந்த அடிப்படையில் உரை அளவையை 'ஆகமம்' என்று அழைக்கின்றது. இது இறைவனால் அருளப்பட்ட நூல்களை முதன்மைப்படுத்துகிறது.

**"விமலன் அருளிச் செய்த மெய்ந்நூல் ஆகமம் ஆகும்"[16]**

**(சிவஞானசித்தியார், அளவை இயல், பா:5)**

பாச பந்தங்களுக்கு உட்படாத "நிமலனாகிய" இறைவன் அருளிய நூல்களே ஆகமங்களாகும்.

**இருபத்தைந்து தத்துவங்கள்**

சாங்கியத் தத்துவவாதி மணிமேகலையிடம் தனது கொள்கையை விளக்கும்போது, உலகம் எவ்வாறு மூலப்பகுதியிலிருந்து படிப்படியாகத் தோன்றியது என்பதை வரிசைப்படுத்துகிறான்.

**1. மூலப்பகுதி (பிரகிருதி):**

உலகிற்கு ஆதி காரணமாய் இருப்பது மூலப்பகுதி. இது சத்துவம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களின் நிலைக்களன் ஆகும்.

**சத்துவம்:** ஒளியையும், அமைதியையும், நன்மையையும் குறிக்கும் குணம் (அறிவு நிலை).

**இராசதம்:** இயக்கம், வேகம் மற்றும் முனைப்பைக் குறிக்கும் குணம் (செயல் நிலை).

**தாமதம்:** பொருள் சோம்பல் மற்றும் தடையைக் குறிக்கும் குணம் (மறைப்பு நிலை).

இந்த மூன்று குணங்களும் சமநிலை குலைந்து, ஒன்றுடன் ஒன்று இணையத் தொடங்கும்போது உலகப் பொருட்கள் உருவாகின்றன.

**2. மான் (புத்தி):**

மூலப்பகுதியிலிருந்து முதலில் தோன்றுவது “மான்” எனப்படும் பேரறிவு.

**“மூலப்பகுதி யுள்ளால் மான் எனப் பேரோடு புத்தி பிறக்கும்”**

**(மணிமேகலை 27: 210-211)**

**3. அகங்காரம்:**

புத்தியிலிருந்து “அகங்காரம்” (யான், எனது என்னும் முனைப்பு) பிறக்கின்றது. இதுவே ஐயமின்றித் தன்னுணர்வைத் தோற்றுவிக்கிறது.

**4. ஐம்பூதங்களும் நுண்பொருட்களும்:**

அகங்காரத்திலிருந்து ஆகாயம் முதல் நிலம் வரையிலான ஐம்பூதங்களும் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்), அவற்றின் மூலமான தன்மாத்திரைகளும் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) தோன்றுகின்றன.

**5. பொறிகளும் புலன்களும்**

அகங்காரத்தின் “சத்துவ” பகுதியிலிருந்து அறிவுப் பொறிகளும், “இராசத” பகுதியிலிருந்து செயற்பொறிகளும் தோன்றுகின்றன. மனம் இவ்விரண்டையும் ஒருங்கிணைக்கும் கருவியாகக் கருதப்படுகிறது.

**ஐம்பொறிகள் (5):** மெய், வாய், கண், மூக்கு, செவி.

**செயற்பொறிகள் (5):** வாக்கு, பாதம், கை, எருவாய், கருவாய்.

**மனம் (1):** இது சங்கல்பம் மற்றும் விகற்பம் செய்யும் ஆற்றல் கொண்டது.

**6. புருடன் (ஆன்மா):**

சாங்கியத் தத்துவத்தின் 25-வது தத்துவம் “புருடன்” ஆகும். இது இயற்கைக்கு (மூலப்பகுதி) முற்றிலும் மாறானது. இது எதனாலும் படைக்கப்படாது, எதையும் படைக்காது; ஆனால் அனைத்தையும் அறியும் சாட்சியாக விளங்குகிறது.

**“இருபத்தைந்து தத்துவமாகிய புருடன்**
**அறிவே வடிவாய் அறிவு இலாத ஆகிய**
**மூலப்பகுதியை நுகர்ந்து நிற்கும்”**

**(மணி, 27: 210-220)**

ஒரு முடவனும் (புருடன் - அறிவுண்டு, செயலற்றவன்), ஒரு குருடனும் (மூலப்பகுதி - செயலுண்டு, அறிவற்றவன்) இணைந்து பயணம் செய்வது போன்றதே இப்பிரபஞ்ச இயக்கம் எனச் சாங்கியம் விளக்குகிறது.

**முடிவுரை**

மணிமேகலையின் 27-வது காதை தமிழர்களின் மெய்யியல் முதிர்ச்சியை உலகிற்குப் பறைசாற்றும் தத்துவ ஆவணமாகும். இந்த ஆய்வின் முடிவுகள் பின்வருமாறு:

**தர்க்கச் சிறப்பு:** காட்சி, கருதல், உரை ஆகிய மூன்று அளவைகள் மூலம் அறிவைப் பகுத்தாயும் சாங்கியத்தின் முறை, இன்றைய அறிவியல் சிந்தனைக்கு நெருக்கமானது.

**இயற்கைப் பரிணாமம்:** பிரபஞ்சம் என்பது ஒரு "படைப்பு" அல்ல, அது மூலப்பகுதியிலிருந்து தோன்றிய பரிணாம வளர்ச்சி என்பதை 25 தத்துவங்கள் மூலம் சாங்கியம் நிறுவுகிறது.

**மொழி ஆற்றல்:** "மான்", 'விகற்பம்", "சுட்டுணர்வு" போன்ற நுட்பமான தத்துவக் கலைச்சொற்களை மணிமேகலை கையாண்டுள்ள விதம், சிக்கலான மெய்யியலையும் தாங்கும் தமிழ் மொழியின் ஆற்றலை வெளிப்படுத்துகிறது

மணிமேகலை காட்டும் சாங்கியம் என்பது இயற்கையையும், மனித அறிவையும் தர்க்க ரீதியாக இணைக்கும் ஒரு அறிவியல் மெய்யியல் ஆகும். இதுவே பிற்கால இந்தியத் தத்துவத் தர்க்க முறைகளின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது

**சான்றெண் விளக்கம்**

[1.] இளம்பெருவழுதியார், பரிபாடல், பாடல்: 3, வரிகள்: 28-29.

[2.] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, சமயக்கணக்கர் தந்திரம் கேட்ட காதை, வரிகள்: 205-208.

[3.] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, வரிகள்: 209-210.

[4.] வாமன முனிவர் (உரையாசிரியர்), நீலகேசி, சமயவாதி சருக்கம், பாடல்: 344.

[5.] திருமூலர், திருமந்திரம், ஒன்பதாம் தந்திரம், பாடல்: 2132.

[6.] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, வரிகள்: 219-220.

[7.] அருள்நந்தி சிவச்சாரியார், சிவஞான சித்தியார் (சுபக்கம்), அளவை இயல், பாடல்: 1.

[8.] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, வரி: 215.

[9.] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, வரிகள்: 210-213.

[10.] நீலகேசி, பாடல்: 345

[11.] அருணந்தி சிவாச்சாரியார், சிவஞான சித்தியார், அளவை இயல்: 1

[12.] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, காதை 27: (வரி : 205-208)

[13.] க.நெடுஞ்செழியன், தமிழர் தத்துவம், பக். (215-220)

[14.] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, காதை 27: (வரி: 219-224)

[15.] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, காதை 27: 225

[16.] அருணந்தி சிவாச்சாரியார், சிவஞான சித்தியார், அளவை இயல்: 5

[17.] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, காதை 27: (வரி: 210-220

## REFERENCE EXPLANATION

[1.] Jayamohan, Six Visions in the Hindu Tradition (p-109)

[2.] Jayamohan, Six Visions in the Hindu Tradition (p-110)

[3.] Aavoor Mulangizhar, Purananuru, Song: 38

[4.] Kaduvan Ilaveyinanar, Paribadal, Song: 3 (lines: 13-14)

[5.] Seethalai Satanar, Manimekalai, Kathai 27: 209-210

[6.] Neelakesi Author, Neelakesi, Song: 344

[7.] Ilangovadigal, Silappadhikaram, Neerpaadi Kathai: 182

[8.] Thirumoolar, Thirumanthiram, Song: 2732

[9.] Seethalai Satanar, Manimekalai, Kathai 27: 205-206

[10.] Neelakesi, Song: 345

[11.] Arunanthi Sivachariyar, Sivagnana Sitthiyar, Meyya Iyal: 1

[12.] Seethalai Satanar, Manimekalai, Kathai 27: 205-208

[13.] K. Nedunchezhiyan, Tamil Philosophy, pp. (215-220)

[14.] Seethalai Satanar, Manimekalai, Kathai 27: 219-224

[15.] Seethalai Satanar, Manimekalai, Kathai 27: 225

[16.] Arunanthi Sivachariyar, Sivagnana Sitthiyar, Meyya Iyal: 5

[17.] Seethalai Satanar, Manimekalai, Kathai 27: 210-220